1989 ஏப்ரல் 29]

(முற்பகல் 9—50)

வந்த வண்ணம் இருக்கின்றன. இப்போது அந்தப் பணிகளை துவக்குகின்றபோது, அதற்கான ஆய்வினைச் செய்தபிறகுதான் அதைத் துவக்கவேண்டும் என்று இறுதியாக சொல்லப் பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பல்வேறு பணிகளை மேற்கொண்டு இருக்கிறார்கள்.

துறையூர் நகர அரசு மருத்துவமனை

164—(*வினா எண். 541) திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகர அரசு மருத்துவமனையில் காது, மூக்கு, தொண்டை, பல் போன்ற வற்றிற்கு தனியாக சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆர். மூக்கன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உப்பிலியாபுரம் தொகுதி, துறையூர் நகர அரசு மருத்துவமைனையில் காது, மூக்கு, தொண்டை மற்றும் பல் போன்றவற்றிற்கு தனியாக சிகிச்சைப் பிரிவுகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் விடையைக் காதில் வாங்கவில்லையோ !

திரு. ஆர். மூக்கன் : தலைவர் அவர்களே, வசதி இல்லாத ஏழை விவசாயிகளும், நெசவாளர்களும், மலைவாழ் மக்களும், ஆதி திராவிட மக்களும் என்னுடைய தொகுதியில் 2 லட்சம் பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் திருச்சிக்குச் சென்று சிகிச்சை பெறுவதற்கு வசதி இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். எனவே அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொகுதியிலேயிருந்தும், தங்க ளுடைய தொகுதியிலே இருக்கின்ற மருத்துவமனைகளைப் பல்வேறு நிலைகளிலே உயர்த்தவேண்டும் என்று எல்லா

உறுப்பினர்களுமே கொடுத்திருக்கிறார்கள். அரசினுடைய நிதி நிலையையும், அங்கே இருக்கின்ற மருத்துவமனையினுடைய தகுதியையும் கருத்தில் கொண்டு, இந்த அரசு ஆவனச் செயல்ளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஆர். மூக்கன் : தலைவர் அவர்களே, என்னுடைய மலைவாழ்த் தொகுதி தனியாக பரிசீலிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : தலைவர் அவர்களே, இன்றைய தமிழக முதல்வர் டாக்டர் கலைஞரை விட, மலைவாழ் மக்களின் மீதும், தாழ்த்தப்பட்ட மக்களின் மீதும் அதிக அக்கறை கொண்டவர்கள் யாரும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை. நிச்சயமாக அதற்கான முயற்சிகள் விரைவில் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்த வினா.

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உறுப்பினர் நான் இன்று வரமாட்டேன், மற்றொரு நாள் நான் வருகின்ற போது இந்தக் கேள்வியை எழுப்பலாம் என்று என்னிடம் கேட்டுக்கொண்டார்கள். நீங்கள் அனுமதிப்பீர்கள் என்று சொன்னால், வேறு ஒரு நாளைக்கு இந்தக் கேள்வியை எடுத்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 165 மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப்படுகிறது.

பொற்பந்தல் கிராமத்தில் துணைமின் நிலையம்

166—(*வினா எண். 361) திரு. கே. சுந்தர் : மாண்புமிகு மின்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

உத்திரமேரூர் ஒன்றியம் சாலவாக்கம் பகுதியில் பொற்பந்தல் கிராமத்தில் புதிதாக துணை மின் நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

மாண்புமிகு திரு. கே. என். நேரு : மாண்புமிகு தலைவர் அவர்களே, செங்கற்பட்டிற்கும் மதுராந்தகத்திற்கும் இடைப்பட்ட பகுதியில் மின்தேவையின் மையப்பகுதியாக புக்கத்துறை என்ற கிராமம் உள்ளதால் பொற்பந்தலுக்குப் பதிலாக புக்கத்துறையில் துணை மின்நிலையம் அமைக்கும் திட்டம் ஆய்வில் உள்ளது.